Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணிமீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எசு] யாழ்ப்பாணம்:- சுபகிருதுஞு தைமீ கஅஉ வெள்ளிக்கிழமை (1 February. 1963) [இல-சரு]

# இந்துசமய விருத்திக்கு 20000

## ரூபா கிடைக்கிறது

### பாடசாலைகளின் நேரசூசிக்குப் புறம்பான நேர இந்துசமய வகுப்புகள்

---0---

மேலே கூறப்பட்ட வகுப்புகளை இதுவரை நடத்தி வந்தவர்களுக்கு ஊக்கம் அளித்து, இவ்வகுப்புகளை விருத்தியடைச் செய்வதற்காக, அரசாங்கம் ரூபா 20 000/- ஒதுக்கியுள்ளது இப்பணத்திலிருந்து உதவி பெற இப்படியான வகுப்புகளை இதுவரை இலங்கையின்எப்பாகத்திலும்நடத்தி வந்த யாவரும் விண்ணப்பிக்கலாம்.

2, பாடசாலைகளில்பிள்ளைகள் எவ்வாறு வெவ்வேறு வகுப்புக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு வகுப்புக்கும் எவ்வாறு வெவ்வேருகப் பாடம் சொல்லிக்கொடுக்கப்பெறுவார்களோ. அதுபோன்றே மேற்கூறப்பட்ட இந்து சமய வகுப்புகளும் நடத்தப்பட்டவையாக இருத்தல் வேண்டும். கூட்டுப் பிரார்த்தனை முதலிய சமய வழிபாடுகளை மட்டும் நடத்தியவர்களை, மேற்கூறிய சமய வகுப்புகளை நடத்தியவர்களென ஏற்றுக்கொள்ள, இப்பண உதவியின் நோக்கம் இடங்கொடாது.

3 மேற்கூறிய விதிகளுக்கு அமைய வகுப்புகளை இலங்கையில் நடத்தி வந்த அதிபர்கள்,"கௌரவ செயலாளர், இந்து சமய ஆலோசனைச்சபை, 60 இராமக்கிருஷ்ண ரேட், கொழும்பு 6" என்ற விலாசத்துக்குத் தங்கள் வகுப்புகளின் விபரங்களை எழுதி, விண்ணப்பப்பத்திரங்களைப் பெறவேண்டும்.

நா, நவரத்தினம்,
கௌரவ செயலாளர்,
இந்து சமய ஆலோசனைச்சபை.

---

### நற் சிந்தனை

யவனர் சோனகர்
தமிழர்சிங் களவர்
எவரும் வணங்குவார்
எந்தைதன் தாளே,

---

### தருமம் என்று ஒரு பொருள்

தருமத்தைப்பற்றி எவ்வளவு உரத்துக் கூறினாலும் ஒருவரும் அதைக் கவனிப்பதில்லை, அர்த்தம் காமம் (பொருள் இன்பம்) என்னும் இரு நிலைகளும் இயல்பாகவே ஒருவனுக்குக் கிடைக்கும்போது முதற்கண் உள்ளதாகிய தருமம் கவனியாமல் விடப்படுகிறது தருமத்தைக் கடைப்பிடிப்பதனுல் மனிதன் என்னும் தன்மை அவனில் பிரகாசமடைகின்றது. கவலை, அச்சம், மகிழ்ச்சி முதலிய உணர்ச்சிகளால் தருமவழியினின்றும் விலகக் கூடாது. உணர்ச்சிகள் நிலையற்றவை தருமம் நிலையானது.

-மகாபாரதம்.

---

உ

ஆருருவவுள்குவாருள்ளத்துள்ளே
யவ்வுருவாய்நிற்கின்றவருளுந்தோன்றும்
வாருருவப்பூண்முலைநன்மங்கைதன்னை
மகிழ்ந்தோருபால்வைத்துகந்தவடிவுதோன்றும்
நீருருவக்கடலிலங்கையரக்கர்கோனை
நெறுநெறெனடர்த்திட்டநிலையுந்தோன்றும்
போருருவக்கூற்றுதைத்தபோற்புத்தோன்றும்
பொழிறிகழும்பூவணத்தெம்புனிதனுர்க்கே.

x x x

ஊனுகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானுதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
ருணுகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானுன்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

---

### அகில இலங்கை சங்கீத வித்வத் சபை
### ஸ்ரீ தியாக பிரம்ம உற்சவம்

இம்மாதம் 20-ந்உ (2-2-63) சனிக்கிழமையன்றும் 21-ந்உ (3 - 2 - 63) ஞாயிற்றுக்கிழமையன்றும் ஷை உற்சவம் நல்லூர் சண்முக தீர்த்த மண்டபத்தில் தினமும் மாலை 3-30 மணி தொடக்கம் நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் பூசையும் ஆராதனையும் பிரம்மஸ்ரீ K. P. ஹரன் அவர்களின் தலைமையில் நடைபெறும்.

---

### மாசி - 4

இலங்கை சுதந்திரம் அடைந்த தினமாகிய எதிர்வரும் ஆங்கில மாசி 4-ம் திகதியை ஈழத்தின் மானமுள்ள தமிழ்ப்பேசும் மக்கள் துக்கதினமாகக் கொண்டாடி, தெருத்தோறும் கறுப்புக் கொடிகளைத் தொங்கவிட்டு களியாட்டங்களில் கலந்துகொள்ளாமல் துக்கதினமாகக் கழிக்க வேண்டும் என்று கோரும் அறிக்கை ஒன்றை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பீடம் வெளியிட்டுள்ளது.

---

# துங்கக் கரிமுகத்துத் தூமணி

## கல்லாடரின் கவினுடைக்கருத்து

ஸ்ரீ வ. குகசர்மா

**வி**நாயகப் பெருமானின் சிந்தனை ஏற்படுமானல், அவரின் யானைமுகம் தான் முதல் நமது ஞாபகத்துக்கு வரும். விநாயகரைப் புகழ்ந்து பாடியவர்கள் யாவரும் அவருடைய வேழமுகத்தையே பெரும்பாலும் புகழ்ந்து பாடினர்கள். "வேழமுகத்து விநாயகன்" என்றும், துங்கக்கரிமுகத்துத் தூமணி என்றும் ஔவையார் புகழ்ந்தனர். "வேழமாமுகம் கொண்டுற்ற கச்சியின் விகட சக்கரக் கணபதிக்கன்பு செய்வாம்" என்றார் கச்சியப்பர். ஆதிசங்கரர் வேழமுகத்து விநாயகனை வணங்கும்போது யானை முகம் என்பதில் ஒரு குறை இருப்பதாக உணர்ந்தார். யானைகள் சிங்கத்திற்குப் பயப்படும் தன்மையுடையன. அந்தச் சந்தேகத்தை அவர் தனது தோத்திரத்தினலே நீக்கிவிடுகிறார். ("மஹாதந்திவக்த்ராபி பஞ்சாஸ்யமான்யா") "யானையின் முகத்துடன் கூடினவரானலும் சிங்கங்களாலும் வணங்கத் தகுந்தவர்" என்று கூறுகிறார்.

இந்த யானை முகத்தை நன்ருக வருணித்துப் பாட வேணடுமெனக் கருதினர் கல்லாடர் என்னும் புலவர். விநாயகப் பெருமானது தேகம் பொன்போன்று ஒளிவீசும் தன்மையுடையது. அவரது ஒளிபொருந்திய கன்னங்களிலிருந்து மதநீர் பாய்ந்து செல்லும். அதிலே வண்டினம் மொய்க்கும். விநாயகப் பெருமானது ஒரு கொம்பு பிறைச் சந்திரன் போல் விளங்குகின்றது. [illegible] மலையிலிருந்து வீழும் [illegible] யின் கண்ணே கரிய மணிகள் இருக்கும்" தோற்றத்தை,

"திங்கள் முடிபொறுத்த
பொன்மலை அருவி
கருமணி கொழித்த
தோற்றம் போல
இருகவுள் கவித்த
மதநதி உவட்டின்
வண்டினம் புரளும்
வயங்கு புகர்முகத்த"

என்ற வரிகள்மூலம் எடுத்துக்காட்டுகிறார். கடலுக்குமேல் சூரியன் எழுவது ஒரு இயற்கைக் காட்சி. ஆனல் சூரியனிலிருந்து கடல் எழுவதைக் காண முடியாது. அவ்வாருன இல்பொருள் உவமையை நமக்குக் காட்டுகிருர் கல்லாடர். விநாயகருக்கு மூன்று கண்கள், சந்திரன், சூரியன் அக்கினி என்பனவை அக்கண்கள். அவற்றிற்கு மேலே கருங்கடல்போன்று கபோலமதம் எழுந்து பாய்கின்றது. "செங்கதிர் திரள் எழு கருங்கடல் போல முக்கண்மேல் பொங்கும் வெள்ளம் எறி கடத்த" என்பது கல்லாடம்.

விநாயகப் பெருமானின் செவிகள் காத்தற்றொழி [illegible] பெருமான் [illegible] களாய திருநடனத்தைச் செயும்போது அக்கினி உண்டாகின்றது. பன்னிரண்டு சூரியர்கள் அக்கினி மயமாக இருக்கிருர்கள். தென்கீழ்த்திசை அக்கினி திசை அங்கே அக்கினி தேவன் இருக்கிருன். சமுத்திரத்தின் மத்தியில் உலகத்தையே அழிக்கவல்ல வடவைக்கனல் இருக்கின்றது. முனிவர்கள் வெகுளியால் இடும் சாபம் அக்கினிக்குச் சமானமானது. இவ்வாருன ஐந்துவிதமான கொடிய அக்கினிகளைப் பார்க்கிருேம் இவை எல்லை கடந்துவிட்டால் உலகத்தையே தகித்துவிடும் சக்தி வாய்ந்தவை. இவற்றை அளவில் அதிகப்படாது தமது குழையணிந்த செவிகளின் அசைவால் மட்டுப்படுத்துகிருர் விநாயகப் பெருமான். "நிலைவிட்டுப் படராது காணியில் நிலைக்கச் சிறு காற்று உழலும் அசைகுழைச்செவிய" என்

தொடர்ச்சி 4ம் பக்கம்

---

### எல்லாருங் காண்பார்களோ!

★

**"அளவையூர் - சஞ்சீவி"**

இராகம்: காம்போஜி :: தாளம்: ஆதி

பல்லவி

எல்லாருங் காண்பார் களோ — ஐயனை
ஏகனை அநேகனை நடேசனைலிங் கேசனை (இங்கு) (எல்)

அனுபல்லவி

கல்லான நெஞ்சினராய்க் கருப்புகு வார்கள்
கடவுளில் லைஎன்று கருத்தழி வார்கள் (எல்)

சரணம்

ஐந்தெழுத் தாகிநடம் ஆடிடும் சித்தனை
அன்னைபங் காளனய் அருள்புரி அத்தனை
பந்தமகல இன்பம் பாலிக்கும் முத்தனை
பக்திமு திர்ந்தசுவைப் பழுத்திர சத்தனை (எல்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அறிவித்தல்

தைப்பூசத் திருநாளுக்காக தை உரு உ (7-2-63) வியாழக்கிழமை இந்துசாதன அலுவலகத்திலும், சைவப் பிரகாச அச்சகத்திலும் வேலை நடைபெறாது. —அதிபர்.

THE HINDU ORGAN

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

சுபகிருது ஹு தை மீ கஅ உ வெள்ளிக்கிழமை


## சேவையின் சின்னம்

இருபத்தைந்தாண்டுகள் ஏகிவிட்டன உலகஉத்தம தொண்டனாய் விளங்கிய காந்திப்பெரியார் இவ்வுலக வாழ்வு நீத்து. இந்நெடுங் காலத்தில் அவனி எங்கும் இன்னலும் இடரும் கலகமும் கலக்கமும் துக்கமும் துன்பமும் குடிகொண்ட நெருக்கடி தொடர்ந்து காணப்படுகின்றதை நோக்குமிடத்தில் உத்தம தியாகிகளின் உழைப்பின் பயன் எங்கே என்று எண்ணவேண்டியிருக்கின்றது.

மானுடச்சிப்பிக்குள்ளே மகாத்மா ஓர் முத்துப் போல என்பதுண்மை. ஆனால் இந்த முத்தனைய உத்தமரின் சத்திய வாழ்க்கை எத்துணையும் மனித சமூகத்தைப் புனிதப்படுத்த முடியாமலிருக்கின்றதே என்று நாம் அலமரவேண்டியிருக்கின்றது. மன்னுயிர்க்கெல்லாம் நன்னய நண்பனாகத் தன்னுயிர் நீங்கும் வரைக்கும் என்னயமுங்கருதாது சேவை செய்த மகாத்மாவின் வாழ்க்கையைப் பின்பற்றி மக்கள் நடந்துகொள்வது சுலபமாகாது என்பதுண்மையே. ஆனால் ஒழுக்கப் படிகளில் ஒவ்வொன்றாக உயர எழுந்து நல்லவண்ணம் வாழுவதற்கு முயற்சி செய்ய முடியாமல் நாமேன் அல்லற்படுகின்றோம்? காந்திப்பெரியார் சேவையின் சின்னமாக விளங்கினார் என்றால் அவர் ஒழுக்கமென்னுங் குன்றேறி நின்றார் என்பதே. பாரதநாட்டு மக்கள் சீரடையவேண்டுமென்று தேச சேவைத் திட்டம் வகுத்த மகாத்மா மதுபானத்தை அகற்றுதலையும் கொல்லா விரதம் குவலயம் கொள்ளுதலையும் வாய்மை கடைப்பிடித்தலையும் இன்றியமையா ஒழுக்க நெறியாக வைத்து இறைவன் திருநாமத்தை எப்பொழுதும் இயம்பும் பழக்கத்தைக் கட்டாயமாக்கிக் கூட்டு வழிபாட்டு நெறியை எடுத்துக்காட்டினர். சேவையின் சிகரம் இதுவே.

ஆனால் இக்காலத்திலே தலைமை தாங்குகின்றோமென்று அசம்பாவித நிலையை உண்டுபண்ணியிருக்கின்றவர்கள் சேவையென்ன என்றேயறியாதவர்களாய்க் காணப்படுகின்றனர். காந்திப்பெரியாரின் வாழ்க்கைப் பெருமையை நன்காராய்ந்து பார்க்கும் பொழுது ஒழுக்கமே உருவான ஒருவரின் தூயசெயல்களைக் காண்கின்றோம். புனித உணவும் பொருத்தமான உடையும் பொழுது போக்கற்ற முயற்சியும் பிறர்க்குரியாளராய் அவர்களைப் பேணும் பணியும் இறைநெறி நிற்றலுமே மகாத்மாவின் வாழ்க்கை மகத்துவமாகும். உண்ணாவிரதமிருந்து உலக மக்களுள்ளத்தில் கள்ளமும் கபடமும் அகற்றக் கூடிய நல்லுணர்ச்சியை எழுப்பிய நெறி — சேவையின் திறமையை எடுத்துக்காட்டுதல்போல வேறு முறையில்லையென்றே நாம்நினைக்கின்றோம். பாரதவிடுதலை இயக்கத்தைப் புனிதமாக்க மகாத்மா பன்முறை உண்ணாவிரதம் இருந்தார் என்றதன் கருத்தை இப்பொழுது யாரும் அறிகிலர் போலும்.

மகாத்மாவை நினைவு கூரும்பொழுதுசேவையின் திறமையை நாங்கள் எண்ணுவோமானால் ஒழுக்க நெறியிலே தொண்டர்பணி செய்வதற்குரிய உணர்ச்சி உண்டாகும், அவ்வாறுண்டாகிலன்றி தேச சேவையும் மொழிப்பணியும் சமயத்தொண்டும் பயனளிக்குமென்றேங்கமுடியாது.

# திருக்கோவையார்

[அணிமையில் நடைபெற்ற அ. இ. சைவ மகாநாட்டில் இரண்டாம் நாளன்று கலந்துகொண்ட வித்துவான், சைவப் புலவர், திரு. இ. திருநாவுக்கரசு அவர்கள் ஆற்றிய உரை]

முற்றொடர்—5

இவ்வாறு குருமூர்த்தியை அடைந்த மணிவாசகர் "காந்தத்தைச் சென்று இரும்பு அணைந்தவாறு" தன் செயலை மன்செயலதாக மதித்ததன்றி- சிவம் என்றால் என்ன? ஞானம் என்றால் என்ன? போதம் என்றாலென்ன? என்று கேட்டதாகவும் கையிலிருக்கிற புத்தகத்தின் பெயரென்ன என்று கேட்டதற்கு இறைவன் அது சிவஞான போதம் என்று உரைத்ததாகவும் கதைகட்டி இருக்கின்றார்கள் நம்மவர்கள் - "இப்படி எழுதுவது உபசார வழக்கு" என்று கொள்வதேயன்றி உண்மை வழக்கல்ல. "காணுதாற் காட்டுவான் தான் காணான்" என்றவாறு இது நகைக்கிடமான தொன்றாகும். ஆகவே 'கண்டபடியே கண்டு காணுமை காணுமை கொண்டபடியே கொண்டு இரு' என்றபடி ஞானமயமானார். அந்த இன்பம் எப்படிப்பட்டது என்றதனை நுகருந்தோறும் இனித்தினித்துத் தெவிட்டாத பேரின்பத் தேனை. வியந்து இருவயினொத்த தன்மையினராயினர் இருவயினொத்தலாவது புணர்ச்சிக்கு முன் நின்ற வேட்கையன்பு புணர்ந்தபின்பும் அப்பெற்றித்தாய் நிற்கும் என விளக்கப் புணர்ந்தாற் புணருந்தொறும் போகம் பின்னும் புதிதாய் மணந்தாழ் புரிகுழலாள் போல இன்னும் வளர்கின்றதே... என்று உவமைகாட்டி விளக்கினார். சிவானந்த இன்பம் நுகர்ந்த பின்பும் அவ்வாசை வரையறுக்கொணாமையின்,

"கோற்றேனெனக்கோ
குரைகடல் வாயமுதென்கோ
ஆற்றேனெங்களரனே
அருமருந்தே எனதரசே
சேற்றார்வயல் புடைசூழ்தரு
திருப்பெருந்துறை உறையும்
நீற்றார்தரு திருமேனி
நின்மலனே உனையானே"

அழுந்தி உரைக்கின்றார்

திருவடிதீட்சை பெற்றதன் மேல் இறைவன் மறைந்தருளியமையை பிரிவுணர்த்தலென்ற துறையில் வைத்துக் கூறுகிறார்,

சிந்தாமணி தெண்கடலமிர்தம்
தில்லையானருளால்
வந்தால் இகழப்படுமோ
மடமான் விழிமயிலே
அந்தாமரை அன்னமே
நின்னையா னகன்றாற் றுவனே!
சிந்தாகுலமுற்றென்னைவென்னை
வாட்டம் திருத்துவதே.

அழகிய தாமரை மலர்க்கணிசெய்யுமன்னமே, என்னுயிரினும் சிறந்த நின்னை எனை இடைப்பருவரல் சேர்த்து நின்னிற் பிரிந்து யானகன்று மனம் ஆற்றி வாழேனோ? எனக் கூறுகின்றார். இஃது "ஈசனருள் எங்கெறிச் சென்றதே எங்கதை யாரருள் எங்கெறிச் சென்றதே" என்ற சேக்கிழார் சுந்தரர் வாக்கில் வைத்துக் கூறுவனவற்றை ஞாபகப்படுத்துகின்றன.

இவர் சிந்தாமணியையும் அமிர்தத்தையும் அருமை பெறற் பொருளாக மதிப்பவர். இவை பெறுதற்கரியன என்பதனால் அச்சிந்தாமணியை ஈற்று ஊதியமெடுத்துரைத்தாடல் தீர்தலிலும் கூறி மகிழ்கின்றார் அதனைப் பின்னர்க்காண்டும்.

திருவெங்கைக் கோவையாரும் சிந்தாமணியும் திருக்கோவையும் எழுதிக் கொளினும் நந்தாவுரையை எழுதலெவ்வாறு நவின்றருளே எனச் சிந்தாமணியையும் திருக்கோவையையும்ஒருசேர சிலேடை நயம்பற்றி வைத்தார். சிந்தாமணியாகிய மேகலை கிடக்கும் இடையையும் முத்து வடக்கோவை கிடந்தசையும் தனங்களையும் எவ்வாறு படத்திற கீற முடியுமென்ற பொருளும் - சீவக சிந்தாமணி - திருக்கோவையார் என்ற நூல்களின் சொற்பொருளும் அறியக் கிடக்கின்றன. அவற்றிற் சிந்தாமணி வசன காவியம் - திருக்கோவை சைவ சித்தாந்த சாத்திரத்து உச்சியாய் விளங்குவது இறைவனிடம் ஞான வாசகம் கேட்டு நமச்சிவாய என அடியெடுத்துக் கொடுக்கப் பாடிய மணிவாசகர் அறிவாற் சிவனேயென்பது திண்ணம். அவரது பாடலில் வாக்கிற்கலந்திருந்து அழகிய திருச்சிற்றம்பலமுடையார் அவர் பாடத் தன் அருமைத் திருக்கரத்தாலெழுத இதற்குத் திருச்சிற்றம [illegible] கப்பெற்ற பேறுடையது.

அதனை நினைந்தே இலக்கணக்கொத்துடையார் பல்காற் பழகினும தெரியாவுளவேல் தொல்காப்பியம் திருவள்ளுவர் கோவையார் மூன்றினும் முழங்கும் ஆண்டினுமில்லையேல் வடமொழி வெளிபெற வழங்குமென்ப.........

திருவைக் கோவைக்கும் கூட்டுக. இலக்கணமாவது தொல்காப்பியமொன்றுமே. செய்யுளாவது திருவள்ளுவரொன்றுமே — இலக்கியம் திருக்கோவை ஒன்றுமே என்று கொள்ள வைத்தார்- இதன் பெருமை உணராது நன்னூல் இன்னூல் முதலிய இலக்கணங்களையும் பத்துப்பாட்டு எட்டுத்தொகை பதினெண்கிழ்க் கணக்கு முதலாயின இலக்கியங்களையும் ஒரு பொருளாக எண்ணிக் காலங் கழிப்பர் அவர் நிலை பாலாழி மீன்போன்றதென வருந்தத்தக்கது. ஆத்மீக நெறி தழைத்த இதனை விளக்கவே

"வள்ளுவர்சீர் அன்பர்மொழி
வாசகம் தொல்காப்பியமே
தெள்ளுபரி மேலழகன்
செய்தவுரை—ஒள்ளியசீர்த்
தொண்டர் புராணம்
தொகுசித்தி ஓராறும்
தண்டமிழின் மேலாந்தரம்"

எனக் கூறினார். சீரன்பர் மொழிவாசகம் திருவாசகத்தையும் சிறப்பு நோக்க மொழிவாசகம் என்றதனால்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

# திருக்கோணமலையில் விவேகானந்தர் விழா

வேதாந்த கேசரி சுவாமி விவேகானந்தரின் நூற்றாண்டு சனன விழா திருக்கோணமலை இராமகிருஷ்ண சங்க இந்துக்கல்லூரியில் ஒருமாத காலத்துக்கு வாரந்தோறும் கொண்டாட ஏற்பாடாகியுள்ளது. இதற்குப் பெரும் முயற்சி எடுப்பவரும் அயராது உழைப்பவரும் கல்லூரியின் புதிய அதிபர் திரு. க. சிவபாலன் அவர்களே.

சுவாமியவர்களின் சனன தினமாகிய 17-1-63 வியாழக்கிழமை அதிகாலை 7-45 மணிக்கு கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் அதிபரவர்களின் தலைமையின் கீழ் கல்லூரி அரங்கில் கூடினர். சுவாமியவர்களின் படம் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்தது. திரு சு நவரெத்தினம் ஆசிரியரவர்களின் கூட்டுப்பிரார்த்தனையுடன் மிக அமைதியுடன் விழா ஆரம்பமானது. "மனிதன் மனிதனும் வாழ்ந்து அதீத மனிதனாகித் தெய்வநிலை பெறுகிறான் என்பதற்கு எடுத்துக்காட்டாக நமக்கு வழிகாட்டிகளாகச் சிலித்த மிகச் சில நள் சுவாமி விவேகானந்தர் போற்றுதற்கும் வணங்குதற்கும் உரியவர். உடல், உள வளர்ச்சி இரண்டும் மனிதனுக்கு அத்தியாவசியம் என்பதை வீரச்சிங்கமாம் விவேகானந்தரின் வாழ்வு நமக்கு விளக்குகின்றது". என்று பண்டிதர் ஐ சரவணமுத்து ஆசிரியரவர்கள் கூறி மனிதப்பிறவியின் அருமையான பருவமாகிய மணவப்பருவத்தின் சிந்தனைகளும் செயல்களுமே சுவாமியவர்களை உலகம் போற்றும் வீர முனிவ நிலையடையச்செய்தது என்றும், மாணவர்கள் தம் வழிகாட்டிகளாகத் தெரிவு செய்யும் மகான்களில் சுவாமி விவேகானந்தரை அத்தியாவசியம் பின்பற்றவேண்டுமெனவும் கூறிமுடித்தார்.

"வாழ்வு - வாழ்க்கை இரண்டையும் எடுத்தோதியவரும், வாழ்ந்தவரும், வாழும்படி வேண்டியவரும் சுவாமியவர்கள். அவர்கள் கூறும் கல்விக் கொள்கைகளை மாணவர் துருவி ஆராய்ந்தால் வாழ்வு- வாழ்க்கை இரண்டையும் காணலாம் ஒழுக்கம்-ஒழுங்கு இவை இரண்டுமே சுவாமியவர்களின் ஆயுதங்கள். வாழ்க்கை — வாழ்வு இரண்டிற்கும் வேண்டாத நூல்களை வாசிப்பதால் ஒரு மாணவனின் ஒழுக்கம —. ஒழுங்கு பாதிக்கப்படுகின்றன" என்று சைவப்புலவர் பண்டிதர் இ. வடிவேல் ஆசிரியரவர்கள் கூறி மாணவர்களை ஒழுக்க சீலர்களாய் ஒழுங்கு முறைகளைக் கையாள்பவராய் வாழ்ந்து நாட்டுக்கு நல்லவர்களாகும்படி வேண்டினார்.

17-1-63 வியாழக்கிழமை பிற்பகல் திரு. எஸ். ஆறுமுகநாதன் அவர்களின் முயற்சியினால் இந்துக் கல்லூரி மண்டபத்தில் பகிரங்கக்கூட்டம் இனிது நடந்தேறியது.

26 1-63 சனிக்கிழமை பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினர் அதிபரவர்களின் அன்பான வேண்டுகோளையேற்று சுவாமியவர்களின் நூற்றாண்டு சனன விழாவை மிகச்சிறப்பாகக் கொண்டாடுவார்கள். 2-2-63சனிக்கிழமை திருகோணமலையிலுள்ள விவேகானந்த சங்கத்தினர் விழாவை மிகச் சிறப்பாகக் கொண்டாட முன்வந்துள்ளனர்.

9-2-63 சனிக்கிழமை காலை 9-00 10-00 மணிவரை கட்டுரைப்போட்டி நடக்கும். பி. ப. 3 மணியிலிருந்து பேச்சுப் போட்டி ஆரம்பமாகும். திருகோணமலையிலுள்ளபாடசாலை மாணவ மாணவிகள் இப் போட்டிகளில் பங்குபற்றுவார்கள்,

16-2-63 சனிக்கிழமையும் 17-2-63 ஞாயிற்றுக்கிழமையும் பகிரங்கக் கூட்டங்கள் கல்லூரி மாணவர்களாலும் ஆசிரியர்களாலும் நடத்தப்பெறும். 17-2-63 பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமகம்சரின் சனன தினமுமாகையால் பரமகம்சரின் சனனவிழாவும் சுவாமியவர்களின் நூற்றாண்டு சனன விழாவோடு சேர்த்துக் கொண்டாடப்படும்.

17-2-63பிற்பகல்4மணிக்கு பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணர் வேதாந்தகேசரி சுவாமி விவேகானந்தர் தூயஅன்னைசாரதா தேவி ஆகிய மூவரின் படங்களும் ஊர்வலமாகக்கொண்டு வரப்பட்டு கல்லூரி அரங்கில் வைக்கப்படும் இரு தினங்களிலும் கூட்டுப்பிரார்த்தனை, பத்திப்பாடல்கள், கதாப்பிரசங்கம், இலங்கையின் பல பகுதிகளிலுமுள்ள பேச்சாளர்களின் பேச்சுக்கள் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை

## 74-வது வருடாந்தக் கூட்டம்

ஷெ சபையின் 74-வது வருடாந்தக்கூட்டம் நிகழும் சுபகிருது ஹூ தை மீ உவு-ந் உ (10-2-63) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சபை ஆச்சிரம நாவலர் மண்டபத்தில் நடைபெறும்,

நிகழ்ச்சிகள்:

1. தேவாரம்.
2. சென்றவருடாந்தக்கூட்ட வரலாறு.
3. செயற்குழுவின் வருடாந்த அறிக்கை.
4. சைவ பரிபாலன சபையினதும் சைவப்பிரகாச அச்சகத்தினதும் பரிசோதிக்கப்பெற்ற 1961—1962ம் ஆண்டுக் கணக்குகள்,
5 'B' பிரிவுக்கு நிருவாகசபை உறுப்பினரைத் தெரிவுசெய்தல்.
6 புதுவருடத்துக்குரிய சபை உத்தியோகத்தரைத் தெரிவுசெய்தல்.
7 பிரேரவணகள்
8 வேறு விஷயம்,
9 நன்றியுரை
10 தேவாரம்,

சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம், 30-1-63.

ஆ. தனபாலசிங்கம்'
கௌரவசெயலாளர்'

முக்கிய கவனிப்பு:

1. வருடாந்தக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும் பிரேரணைகள் 7-2-63 க்கு முன் செயலாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

2. அங்கத்துவ சந்தாப்பணம் பாக்கியின்றிக் கட்டத் தவறுவோர் வாக்குரிமையை இழப்பர். ஆகவே அங்கத்தவர் யாவரும் கூட்டத்துக்கு முன் சந்தாவை அனுப்பிவைக்குமாறு தயவாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

3. கணக்குச்சம்பந்தமான வினுக்கள் இருப்பின் 7-2-63 க்கு முன் தனுதிகாரிக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

## திருக்கோவையார்
(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இறைவன் எழுதிய திருக்கோவையையும் உணர்த்தும். மேலும் ஔவை கூறிய,

"தேவர் குறளும்
திருநான் மறைமுடியும்
மூவர் தமிழும்
முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர்
சொல்லும் ஒருவாசகமென்
றுணர்'

ஒருவாசகம் என்பது ஒருமை தரும் வாசகம். "பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க நெறிநின்ருர் நீடு வாழ்வார் என்றும் மணிவாசகத்தில் "அன்னே யென்றன்...... நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானே அதற்கு நாயகமே" என்றும் திருக்கோவையில் "நேயத்த தாய் நென்னல் என்னைப் புணர்ந்து நெஞ்சம் நெகப் போய் ஆயத்தால் அமிழ்தாய் அணங்காய் அரனம்பலம் போல் தேயத்தாய் எந்தன் சிந்தையதாய்த தெரியிற் பெரிதும் மாயத்ததாகி இதோ வந்து நின்றதிம் மன்னுயிரே........" என்றும் தொல்காப்பியத்தில் "மக்களொடு துவன்றி மனையறங் காத்து......"

தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப......என்றும் பரிமேலழகருரையில் "குதிரை நெறியறிந்து செலுத்தும் வாதுவன்போல.......என்றும் "இந்திரன் முதலிய இறையவர் பதங்களும் ஏனை மூன்றுமே கூறினுர் என்றும், பெரியபுராணத்துக் "கேடும் ஆக்கமும் கெட்ட திருவினுர் ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார் கூடும் அன்பினிற் கும்பிட லேயன்றி வீடும் வேண்டி விறலின் விளங்கினுர் என்றும்,
சிவஞான சித்தியாரில்

"மன்னவன் தன் மகன்
வேடரிடத்தே தங்கி
வளர்ந்தவனை அறியாது
மயங்கி நிற்பப்
பின்னவனை என்மகனீ
யென்றவரிற் பெயர்த்துப்
பெருமையொடு காப்பாற்றிப்
பேணுமாபோல்
துன்னிய ஐம்புலவேடர்
சூழலிலேபட்டுத் துணைவனையும்
அறியாது துயருறும்
தொல்லுயிரை
மன்னுமருட் குருவாகி
வந்தவரி னீற்றி
மலமகற்றித் தானுக்கி
மலரடிக்கீழ் வைப்பன்"

என்று கூறும் வாக்குகளை நோக்கும்போது சிவத்தோடு அத்துவிதமாக ஒருமைபடச் செய்தலில் ஒருவாசகமென் றுணர் என்று கூறப்பட்டது.

—தொடரும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டிலே
நாவலர்ரோட்டு யாழ்ப்பாணம் பொன்னம்பலம் முருகேசபிள்ளை
— வழக்காளி.
எதிராக
இல. M B 3925
காங்கேசந்துறை கந்தையா ஆறுமுகம். - எதிராளி.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் M B 3925ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்தகோட்டுக் கட்டளைப்படி கீழ் காணும் காணிகள் 1963 ம் ஆ பங்குனிமீ 16 உ சனிக்கிழமை (16-3-1963) முற்பகல் 10 மணிக்கு அவ்வக் காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2780 -ம் மேலும் ரூபா 2000 க்கு 28-2-61 தொடக்கம் 6-3-62 வரை 18% வட்டியும் கூடியதொகைக்கு இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 251-07ம்.

காணியின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பழைக்கோவிற்பற்று வீமன்காமம் இறை 'உயனைக் கலட்டி" நி பர $32\frac{1}{2}$ இதற்கெல்லை கிழக்கு ஆறுமுகம் சங்கரப்பிள்ளைக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு சின்னத்தம்பி சுப்பிரமணியத்துக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு சுப்பர் வயிரமுத்துவுக்கும் மறுபேருக்கும் இலங்கையர் குமாரசுவாமிக்குமுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை இதில் றெயில் ரோட்டுககெடுபட்ட நிலம் புறநீங்கலாக மிகுதியிற் சொரியலாய் 14/65 பங்கு.

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்
—0—

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு, 415/A காங்கேசன்துறை வீதி க. நடராசா அவர்களின் அடைவு கடையில் 31-12-61 ந் திகதிக்கு மூன் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 1963-ம் ஹூ பெப்ரவரி 20 உ (20 - 2 - 63) புதன்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் மேற்படி கடையில் பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
Court Commissioner,
Auctioneer & Valuer 23-1-63.
613 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
M 245 25, 1-2-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 4298,

அருணுசலம் கதிரவேலு
சுழிபுரம்
—வழக்காளி.
எதிராக
பண்டாரி சின்னத்தம்பி
கைம்பெண் ஆசையம்மா
சுழிபுரம்
—எதிராளி,

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் B.M, 4298-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கடும் ஒருதுண்டுக்காணி 1963ஹூ பங்குனிமீ 2உ (2-3-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 5650-ம். இதற்கு ரூபா 4000-க்கு 29-9-61 தீர்வைத்திகதி தொடககம் 11 - 1 - 62 வரை 100-க்கு 7 வீத வட்டியும் பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 259-96.

காணி விபரம்:
வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக வலிகாமம் மேற்கு சங்கானை கோயிற்பற்று சுளிபுரம் இறை 'நொன்கயவயல்" பரப்பு நெல்லுலாச்சம் 15 கிணற்றில அரைப்பங்கும். எல்லை கிழக்கு சின்னையா சிவபாக்கியததின் ஆதனமும் சோமநாதர் சின்னகுட்டியின் ஆதனமும், வடக்கு பரமுசிவகுருவுக்கும் பங்காளருககும் உரிய ஆதனம். மேற்கு அம்பலவாணர் ஆசைமுத்துவுக்கும் வைரமுத்து செல்லையாவுக்கும் பெண் செல்லம்மாவுக்கும், அருணுசலம் கதிரவேலுக்கும் உரிய ஆதனங்கள. தெற்கு ரத்தினம் பெண் சின்னம்மாவுக்கும், ஆறுமுகம் செல்லையாவுக்கும் பெண் பொன்னம்மாவுக்கும் உரிய ஆதனம். இது அடங்கலும் பதிவு இலக்கம் யாழ்ப்பாணம் E 312/74,

சி. செ. மாரிமுத்து,
கொம்மிசனரும்,
விலைமதிப்பாளரும்.
விதானை வளவு
சித்தன்கேணி
15-1-63.
M 249 1-2-63.

2. ஷெ வீமன்காமம் இறை "இயத்தை வயல்" நி. பர. 2. இதற்கெல்லை கிழக்கு ஆறுமுகம் சங்கரப்பிள்ளையினுதனம் வடக்கும் மேற்கும் சுப்பர் செல்லததுரையின் ஆதனம். தெற்கு சின்னத்தம்பி திருநாவுக்கரசுவினுதனம். இதடங்கலும்

3. ஷெ வீமன்காமம் இறை "இயத்தை" நி பர 1. இதற்கெல்லை கிழக்கு கந்தையா பெண் பொன்னுவினுதனம். வடக்கு காசியர் செல்லப்பாவினுதனம். மேற்கு ஆறுமுகம் சங்கரப்பிள்ளையினுதனம். தெற்கு சுப்பர் செல்லததுரையினுதனம்.

செ. இரத்தினசபாபதி,
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 20-1-63.
M 251 1-2-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 4524.
1. சண்முகம் ஆறுமுகமும்
2. பெண் பாக்கியமும்
இருவரும் காரதீவு கிழக்கு
—வழக்காளிகள்,
எதிராக:
1. கந்தையா தம்பிப்பிள்ளையும்
2. பெண் சகுந்தரமும்
இருவரும் காரதீவு கிழக்கு
— எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4524-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணி 1963ஹூ மாசிமீ 23உ (23-2-63) சனிககிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 1724-ம். இதற்குத் தீர்வை ரூபா 1000-க்கு 15-1-62 தீர்வைத் திகதி தொடக்கம் 14-7-62 வரை 100-க்கு 8 வீத வட்டியையும், பின் முழுமையும் இறுபடும் வரைக்கும் முழுத்தொகைககும் 5 வீதவட்டியும் கோட்டுச்செலவு 203-35.

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி காரதீவு கோயிற்பற்று காரதீவு கிழக்கு இறை மணியத்தா வயலும் பூவெளியும் பரப்பு நெல்லுலாச்சம் $15\frac{3}{8}$. இதற்கு எல்லை கிழக்கு சிவசம்பு திருநாவுக்கரசுவுக்கு உரிய காணி. வடக்கு இராமுப்பிள்ளை பெண் பாககியத்துக்கும் பிள்ளை மடத்துக்கும் உரிய காணிகள். மேற்கு பிள்ளைமடத்துக்குரிய காணி. தெற்கு தண்ணீர் வாய்க்கால் இது அடங்கலும்.

2. மேற்படி இறை புலிநின்றபுலம். பரப்பு கிலலாச்சம் 10-ம். வான்பயிர் செய்பயிர்களும் கிணறும். எல்லை கிழக்கு ஆறுமுகம் சுப்பிரமணியத்துக்குரிய காணி. வடக்கு கணபதிப்பிள்ளை பெண் மீனுச்சிப்பிள்ளைக்குரிய காணி, மேற்கு ஆறுமுகம் கைம்பெண் சின்னப்பிள்ளையின் உரிமைக்காரருக்குரிய காணி. தெற்கு முருகர் கந்தையாவின் உரிமைக்காரருக்குரிய காணி இது அடங்கலும். தெற்கே இருக்கும் ரோட்டில் இருந்து தெற்குக்காணியில் மேற்கெல்லை அருகாகவும், கிழக்கெல்லைக் காணியின் தென்மேற்குமூலை அருகாகவும் இக்காணிக்கு வரும் ஆறுமுழ அகலம் கொண்ட வழி உரித்தும்.

சி செ. மாரிமுத்து,
கொம்மிசனரும்,
விலைமதிப்பாளரும்.
விதானை வளவு
சித்தன்கேணி
27-12-62.
M. 248 1-2-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்
—:—

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்திலே
மானிப்பாய் வீரசிங்கம் சோமசுந்தரம்
கைம் பெண் பவளலட்சுமி,
- வழக்காளி.
எதிராக
வழ இல: M B 3814
அச்செழு
1. சோமர் முத்துக்குமாருவும் பெண்
2. சிவபாக்கியமும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தின் M B 3814 -ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி இதன்கீழ் விபரிக்கப்படும் காணிகள் 1963-ம் ஆ பங்குனிமீ 7உ வியாழக்கிழமை (7-3-1963) முற்பகல் 10 மணிக்கு அவ்வக்காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 3705-ம் இன்னும் ரூபா 3000-க்கு 29-12-60 தொடக்கம் 6-10-61 வரை 12% வட்டியும் கூடிய தொகைக்கு இறுபடும்வரை 5% வட்டியும் கோட்டுச் செலவு ரூ 232-30ம்.

காணியின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர்க்கோவிற்பற்று அச்செழுஇறை "நொச்சிகலட்டி" நிபர (41, நாற்பத்தொன்று குழி ($17\frac{3}{4}$) பதினேழே முக்கால். இது 27-9-1946 ல் உலாந்தா திரு. J. சின்னத்துரை அவர்களால் .600ம் இலக்கப்படத்தின்படியுள்ளது. இதற்கெல்லை கிழக்கு இராமலிங்கம் சரவணமுத்துவுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு இராமுப்பிள்ளை அம்பலவாணருக்கும் மறுபேருக்குமுரியஆதனம். மேற்கு புன்னாலைக்கட்டுவன் ஊரெழு ஊரெல்லைகள் தெற்கு சடையர் செல்லப்பாவுக்கும் மயிலு சின்னத்தம்பிக்குமுரிய ஆதனம், பதிவு K.203/249.

2. ஷெ அச்செழு இறை "கலகுடியிருப்பும் கலையும்" நி. பர. ($24\frac{1}{2}$) இருபத்துநாலே காலும் செய்பயிர் வான் பயிர்களும் வீடுகளும் வடக்கெல்லையில் இருக்குங் கிணற்றுப் பங்கும் எல்லையில் கிற்கும் பயிர்களிற் பங்கும். இதற்கெல்லை கிழக்கும் வடக்கும் நாகமுத்து பெண் பொன்னுவுக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு முத்துத்தம்பி பெண் தெய்வானைக்கும் பங்காளருக்குமுரியஆதனம். தெற்கு ஒழுங்கை. இதில சொரியலாய் $\frac{1}{4}$ பங்கும் மேற்கேயிருக்கும் வீட்டில் அரைவாசியும் குசினியும் கொட்டிலும். பதிவு K 210/153.

செ. இரத்தினசபாபதி
கொமிஷனரும்விலைமதிப்பாளரும்
இல:45, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம், 20-1-63.
M. 250 8-2-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்
—0—

யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
புங்குடுதீவு மேற்கு
வயித்தியநாதர் கார்த்திகேசு
வழக்காளி
எதிராக
இல. M. B. 4052

1. புங்குடுதீவு மேற்கு
அருணுசலம் கந்தையா
2. ஷெயூர் பெண் பாறுபதிப்பிள்ளை -எதிராளிகள்.

யாழ்ப்பாணம்டிஸ்திறிக்கோட்டின் M B 4052 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக்காணிகள் 1963ம்ஹூ மாசி மாதம் 23 ம் திகதி சனிக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்றுபிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:- ரூபா 800ம் அதற்கு 2-10-61 தொடக்கம் இறுக்கும்வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 167-25 சதம். இதில் ரூபா 250. 23-7-62 லும் ரூபா 577-56 சதம் 16-11-62 லும் கட்டப்பட்டது.

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி புங்குடுதீவுக்கோவிற்பற்று புங்குடுதீவு மேற்கிறை "மணவலை" பர. நீ இலா. பத்து (பர நீ.இலா. 10), இதில் கிழக்குப்பக்கமாகப் பர.நீ. இலா. ஐந்தும் (பர. நீ. இலா. 5) செய்பயிர் வான்பயிர்களும் வீடுகளும் கிணறும். எல்லை கிழக்கு ஒழுங்கை வடக்கு சுப்பிரமணியம் கைம்பெண் சின்னுச்சிக்குரிய வாதனம். மேற்கு அம்பலவாணர் பெண் கனகம்மாவிற்குரிய வாதனம். தெற்கு கந்தையா பெண் முத்துப்பிள்ளைக்குரியவாதனம்.

2. ஷெயிறை 'நம்பிதிடல்" பர நீ, இல. பன்னிரண்டு (12) செய்பயிர் வான்பயிர்களும். இதிற் சொரியலாய் பர. நீ இல. ஆறு (பர, நீ. இல 6)-ம் அதற்குரியவைகளும், எல்லை கிழக்கு வேலாயுதர் சரவணமுத்துவிற்குரிய வாதனம், வடக்கு முததன் மகள் பொன்னம்மாவிற்கும் பங்காளர்கட்கு முரிய வாதனம், மேற்கு கந்தையா பெண் முத்துப்பிள்ளைக்குரியவாதனம். தெற்கு வேலுப்பிள்ளை தனிநாயகத்திற் குரியவாதனம்.

1962-ம்ஹூ மார்கழிமீ 18-ம்உ
வை. ஏரம்பமூர்த்தி,
கொம்மிஷனர்,
M. 252, 1-2-63.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருநீறு புத்தருக்கோ......?

— புலவர் திரு. சி. சின்னையா —

சந்தத் திருப்புகழ் சாற்றி யருண சபிலதவர்
வந்தித் துளதிருக் கோயிலிவ் விழுத்து வான்மணியா
றுந்தித் தவழ்கதிர் காமம தொன்றிதை யோருமவர்
இந்தப் புவியி லெவரோ கதிரைக் கிறையவனே.

புத்தருக் கோமுரு கையா கடவுள் பொருப்புருவில்
வைத்தன ராதியில் வெண்ணீறு புத்தர் மலிந்தெமது
பத்திசெய் தென்கதிர் காமங்கைப் பற்றுவர் பற்றிய
[நாள்
மெத்துயர் நீதியரங்கிலிவ் வுண்மை விளங்கவென்றே.

மெய்யன்பர் சாத்திரங் கூறுந் தவச்செயல் .
[விட்டதலு
லையன் கதிரையைப் புத்தர்கைப் பற்றும வம்
[பலித்த
துய்யும் வழியெங் கதிர்காம மென்றுரை யோதியயிற்
கையன் கழல்துதி செய்யிற் கதிரையெங் கைவருமே,

ஆலய சேவை யரனு கமஞ்சொலு மத்திறங்கள்
சிலமிவற்றைத் தெரியார் சமயநற் றீட்சைபெறுர்
போலி வணக்கம் புரிவா ரகந்தை பொருணசைகள்
சால விருப்பிட மாவார் மருந்தென்ன சண்முகனே.

யாழ்ப்பாணம்

## — ஐக்கிய இலாப நிதி —

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்தநேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 2829,
தெல்லிப்பழை மேற்கு
தம்பு கைம்பெண்
சிவகாமிப்பிள்ளை
—வழக்காளி.

எதிராக:
மாவட்டபுரம்
1. துரையப்பா கந்தையாவும்
2. பெண் பசுபதி இருவரும்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 2829-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1963-ம்ஹு மாசிமீ 27-ம் திகதி (27-2-63)சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

தீர்வைத்தொகை:-முதல் வட்டி ரூபா 1,607-50 ம். இதற்குத் தீர்வை ரூபா 1,000-க்கு 18-6-59 திகதி தொடக்கம் 4-8-59 வரை 100-க்கு 9 வீத வட்டியும், பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5 வீத வட்டியும், கோட்டுச் செலவு 190-20. இதில் ரூபா 500 30-1-60 ல் கொடுபட்டது. மேலும் ரூபா 500 13-7-62 இல் கோட்டில் கட்டப்பட்டது.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்கு, தெல்லிப்பழை கோயிற்பற்று, மாவட்டபுரம் இறை "கோர்லவடை" பரப்பு லிலலாச்சம் 6-ம், குளி 10-ம், பனைகளும் வடலிகளும், கிணறும். எல்லை கிழக்கு கனகரத்தினம் பெண் சிவபாக்கியத்துக்கும், பங்காளருக்கும் உரிய காணி. வடக்கு சின்னத்தம்பி பெண் முத்துப்பிள்ளைக்குரிய காணி, மேற்கு நாகமுத்து கந்தையாவுக்கும், பங்காளருக்கும் உரிய காணி. தெற்கு விசுவநாதர் சிற்றம்பலத்துக்குரிய காணி. இது அடங்கலும் கிழக்கே இருக்கின்ற ஒழுங்கையில் இருந்து வடக்கெல்லைக் காணியின் கிழக்கெல்லை அருகால் இக்காணிக்குவரும் பாதை உரித்தும்,

சி. செ. மாரிமுத்து,
கொம்மிசனரும்,
விலைமதிப்பாளரும்.

விதானை வளவு
சித்தங்கேணி
17-1-63,
M 247, 1-2-63.

### முள்ளியவளை நிருபர்

ஸ்ரீ. சங்கர சுப்பிரமணியசர்மா அவர்கள் 'இந்துசாதனம்' முள்ளியவளை நிருபராகவும், விற்பனையாளராகவும் நியமிக்கப் பட்டுள்ளார்.

### துங்கக்கரிமுகத்து ...

1-ம் பக்கத் தொடர்ச்சி

னும் செய்யுளடிகள் விநாயகப்பெருமானின் அருளை வலியுறுத்துகிறது. தும்பிக் கரத்தினலே பெருங்காற்று அடிக்கின்றது அது தீமைகளை அகற்றுகின்றது துன்பஞ் செய்த அசுரர்களை அழித்தது. "ஆம்பல் முக அரக்கன் கிளையொடு மறியப் பெருங் காற்று விடுத்த நெடும் புழைக் கரத்த"

"எப்பொழுதும் பாலரூபியாக இருந்தாலும் விகனங்களாகிய மலையைப் பொடி செய்பவர்" என்று ஆதி சங்கரர் ஸ்த்தோத்திரம் செய்கிறுர் அதுபோலவே கல்லாடரும்,

"குண்டு நீர் உடுத்த
நெடும் பார்எண்ணமும்
எண்ணு இலக்கமோடு
நண்ணிடு துயரமும்
அளந்து கோடு முடித்தல்
நின்பரம் ஆதலின்
... ... ... ... .... ... ...
ஆரணம் போற்றும் நின்
காலுற வணங்குதும்."

எனப் போற்றுகிறுர்.

### திருவாசகந் தந்த மணிவாசகர்

25-1-63 நல்லூர் தேவஸ்தான சண்முக தீர்த்த மண்டபத்தில் ஸ்ரீமத். C. S. S. மணிபாகவதரவர்களின் தலைமையில் ஸ்ரீமதி. ஜெகதீஸ்வரி தங்கக்கணபதியவர்கள் "இறையருளும் ஆன்மாவின் மறுபிறப்பும்" என்னும் பொருள்பற்றி இசையுடன் கலந்த பிரசங்கஞ் செய்தார்கள்,

இன்று செல்வி லோகாம்பாள் சுப்பையா அவர்கள் "திருவாசகம் தந்த மணிவாசகர்" என்னும் பொருள் பற்றிப் பிரசங்கஞ் செய்வார்கள்.

உ

### கண்ணப்ப நாயனுர் குருபூசை

நாள்: சுபகிருது ஹு தைமீ உஉ (4-2-63) திங்கட்கிழமை.

இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:

மாலை 6½—7 கடவுளாராதனை
தமிழ்மறையோதல்

நாவலர் சைவப்பிரகாச
வித்தியாசாலை மாணவர்
செல்வன், தி. சுப்பிரமணியஐயர்
செல்வி, தி. சரசுவதி.

விரிவுரை;
'கண்ணப்பநாயனுர்'

சைவப்புலவர்,
திரு. வ, கந்தசாமி அவர்கள்.

சைவாபிமானிகள் யாவரும்
சமூகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்
[illegible]
சைவபரிபாலனசபை
யாழ்ப்பாணம் 31-1-63

நல்லைக்கீர்த்தனம் — 30.

### குகனை மறவேனடி!

*

— யாழ்ப்பாணம் ந. வீரமணி —

இராகம்: பீம்பிளாஸ் : தாளம்: ரூபகம்

பித்துப் பிடித்ததுபோல் - சகியே
சித்தங் கலங்குதடி
முத்துக்குமாரனையே - மனமும்
நித்தமும் நாடுதடி. (1)

பச்சைமயில் மீதில் - முருகன்
பவனி வருகையிலே
இச்சைக் குகந்தானடி - கந்தன்
என்மனம் கொண்டானடி. (2)

உருவந்தனைக் கண்டேன் - என்னுள்ளம்
உவகை மிகக்கொண்டேன்
பருவத் தளிர்மேனி பொடிகாண
புளக மடைந்ததடி. (3)

வெற்றிவேல் ஏந்தும்குகன் - கையில்
வீர மிருக்குதடி
பற்றியே என்கரத்தைப் - பிடித்துப்
பத்தினி யென்றானடி. (4)

வெட்கத்தினல் குனிந்தேன் - மோகன
வேலன் சிரித்தானடி
சொக்கி மகிழ்ந்தேனடி - நானேர்
சொர்க்கத்தைக் கண்டேனடி. (5)

தில்லைச் சிவன் குமரன் - எந்தன்
தேவாதி தேவனடி
நல்லை நகர்க்குகனை - எந்த
நாளும் மறவேனடி. (6)

இவ்வாரம் 2-2-63 — 10-2-63

## உங்கள் பலன்?

[ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

நண்பர்மூலமாக நிறைய இலாபம் அடைய முடியும். புதிய முயற்சிகளில் வெற்றியும் நிச்சயம் ஆனல் மன நிம்மதி இருக்காது.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்,

இவ்வாரமும் நிலபுலங்களால் இலாபம் நிச்சயம், உபயோகமான சில துறைகளில் முதலீடு செய்ய உம்மால் முடியும் புகழும் சமூகவெற்றியும் உண்டாம்.

**மிதுனராசி** மிருகசீரிடம், 2 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1ம், 3ம் பாதம்.

குடும்ப விவகாரங்களில் சிறிது முன்னேற்றம் நிச்சயம். கல்வி ஈடுபாடுகளிலும் வெற்றி உண்டாம் பணமளவில் நல்ல வாரம். உமது சொந்தப் பிரச்சினைகள் தீர்வுபெறும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்.

குடும்பநிலை தொடர்ந்து குழம்பலாக இருக்கும். இரகசிய எதிரிகள் மூலமான தொல்லைகள் உண்டாம். பண நிலைமையும் திருப்திகரமாயிருக்காது

**சிங்கராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

திரும்பவும் ஒரு நல்ல வாரம், எதிரிகளுக்கு இன்னலும், உமக்குப் புகழும், சமூக வெற்றியும் உண்டாம். ஆனல் உடல் நிலை சில காலத்திற்குப் பிரச்சினைக் குரியதாயிருக்கும்,

**கன்னிராசி** உத்தரம் 2,3 4 பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

உமது சாதனை ளில் தாய்வழி உறவினர் உதவுவர். தொடக்கு வதில் சில குறிப்பிட்ட தாமதங்கள் ஏற்பட்டாலும் நீர் வெல்வது நிச்சயம். பணமளவில் ஓரளவு நல்ல வாரம்.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தம்பி தங்கைகள் மிக உதவுவர். பண இலாபமும் நிச்சயம். ஆனல் ஞாயிறு திங்கள்காலை எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும்,

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

பண இலாபங்கள் நிச்சயம். ஆனல் திங்கள் மாலை, செவ்வாய், புதன் எச்சரிக்கையோடு கழிக்கப்பட வேண்டும், வார மீதி நாட்கள் திரும்பவும் சாதகமானவையாம் மாறும்.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

வார முற்பாதிப் பகுதியில் உமது பிரச்சினைகள் சில தீர்வு பெறும். இடர்களில் நண்பர்கள் உதவுவர். புதன் மாலையையும் வியாழன் வெள்ளியையும் எச்சரிக்கையோடு கழிக்கவும்,

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்,

குடும்ப விவகாரங்கள் தொடர்ந்து குழம்பலாக இருக்கும். மன நிம்மதி இருக்காது, தொழிலளவில் நல்ல வாரம். ஆனல் இறுதிநாளை எச்சரிக்கையோடு கழிக்கவும்,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

உமது சாதனைகளை வெகு இலகுவாகக் கையாள முடியும் எதிரிகளுக்கு இன்னல் உண்டாம். வார இறுதியில் எதிர்பாராத சில இலாபங்கள் ஏற்படலாம்,

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

தொடர்ந்து உடல்நிலை திருப்தியற்றிருக்கும். தொழிலளவில் பூரண திருப்தி இருக்கும். பழைய முதலீடுகள் நல்விளைவைத்தரும்,

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணர்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில், யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 1-2-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர், நம. சிவபபிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org